**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.338/2024 நாள்- 05.03.2025

**பி.வா.சா.1-ராஜலிங்கராஜா**

**பி.வா.சா.1-ன் குறுக்குவிசாரணைவாதி தரப்பில்**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விவரம் பற்றி எனக்கு தெரியும். சர்வேஎண்.234/1, 235/2 சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண். 234/1 ல் 1 ஏக்கர் 14 செண்டும், 235/2 ல் 1 ஏக்கர் , 20 செண்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த சொத்துக்கள் அனைத்தும் வாதி கிரையம் வாங்கிய சொத்து என்ற கேட்டால் வாதிக்கு அவர் அப்பா வாங்கி கொடுத்த சொத்து ஆகும். அந்த கிரையம் வாங்கும் போது நான் அவருடன் இல்லை . வாதியின் அப்பா சொல்லி எனக்கு தெரியும். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அப்பா எனக்கு தூரத்து உறவினர். ஜெகநாதராஜாவின் உடன் பிறந்த சகோதரர்கள் இருக்கிறார்கள் . ஜெகநாதராஜாவின் உடன் பிறந்த சகோதரரின் மனைவியின் சகோதரர் நான் என்றால் சரிதான். ஜெகநாதராஜா இடம் வாங்கும் விற்கும் தொழில் செய்து வந்தார். என் பெயரில் ஜெகநாதராஜா சொத்து எதுவும் வாங்கவில்லை. தாவா சொத்தும் ஒரு காலத்தில் என் கைவசம் இருந்ததா என்று கேட்டால் இல்லை. வாதிக்கு நான் எந்த சொத்தும் கிரையம் கொடுக்கவில்லை அவர் அப்பாவிற்கு நான் கிரையம் கொடுத்துள்ளேன். நான் வாதியின் அப்பாவிற்கு 10 கிரைய ஆவணங்கள் கிரையம் எழுதிக் கொடுத்துள்ளேன். வாதியின் அப்பா என் பெயரில் தான் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தார் என்றால் இல்லை. வா.சா.ஆ.3 யை நான் தான் வாதி பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் சர்வேஎண் 235/2 என்று குறிப்பிட்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தபசில் கண்ட

சொத்து என்றால் சரிதான். நான் வழக்கிற்காக வாதிக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை 2013 ம் ஆண்டு கிரையம் பெற்றேன். கிரையம் முடிப்பதற்கு முன்பாக நான் கிரைய ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. கிரையம் முடிப்பதற்கு முன்பாக நான் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்று கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த தாவா சொத்தை வாதியின் அப்பாவிடம் இருந்து கிரையம் பெற்றேன். ஜெகநாதராஜா கிரையம் பெற்றதற்கு வாதியின் அப்பா பெயருக்கு வாதி 2004 ம் ஆணடு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்திருந்தார். அந்த பொது அதிகார ஆவணத்ததை நான் கிரையம் பதிவு செய்வதற்கு முனபாகவே பார்த்தேன். வா.சா.ஆ.2 தான் வாதி அவரின் அப்பாவிற்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணம் என்றால் சரிதான். அந்த பொது அதிகார ஆவணத்தில் தாவா சொத்து பற்றிய விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்து விவரமும் வா.சா.ஆ.2 குறிப்பிடபடவில்லை. வா.சா.ஆ.2 ல் இன்ன காரணத்திற்காக பொது அதிகார ஆவணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் தாவா சொத்தை பராமரிப்பதற்காக மட்டும் தான் பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சொத்தை விற்பதற்கும் , வாங்குவதற்கும், பராமரிப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஒரு பொது அதிகார ஆவணம் மட்டுமேதான் என்றும், குறிப்பிடட ஒரு செயலை கூறி எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவு செய்து சகொடுப்பதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள தா என்றால் குறிப்பிட்டு கூறவில்லை. வா.சா.ஆ.2 ல் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு தாக்கல் செய்வதற்கும், பெறுவதற்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் பொது அதிகாரம் ஆவணம் பெற்றவர் சார்பதிவாளர் அலுவலகத்தில்ஒரு எழுதிக் கொடுக்கும் பொழுது

சார்பதிவாளரால்கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்று கேட்டால் குறிப்பிட்டு கூறவில்லை. வா.சா.ஆ.2 ன் படி வாதியின் அப்பாவி ற்கு எந்த உரிமை மாற்றமும் எற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 சொத்தை பராமரிப்பதற்காக மட்டும் வழங்கப்பட்ட அதிகாரம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 பதிவு சட்டம் மற்றும் இதர சட்டங்களில் குறிப்பிடப்படுவது போன்ற சட்டப்படியான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 சட்டப்படி செல்லத்தக்கதல்ல ஆவணம் என்று ம், வா.சா.ஆ.2 ன்படி வாதியின் அப்பா எனக்கு கிரையம் கொடுப்பதற்கு எவ்வித உரிமையயும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஒரு வெறுமனை பெயரளவில் குழப்பமான சங்கதிகளைக் கொண்ட ஒரு ஆவணம் என்றால் சரியல்ல. சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவணம் பதிவு செய்த பின்பு அசல் கிரைய ஆவணத்தை சார்பதிவாளரிடம் யார் வாங்கினாாக்ள் என்றால் வாதியின் அப்பா வாங்கி என்னிடம் கொடுத்தார். அவர் கிரையம் முடித்த 1 வாரத்தில் என்னிடம் கொடுத்தார். அந்த கிரையம் முடித்த காலத்தில் இருந்து தற்போது வரை அசல் கிரைய ஆவணம் என் கைவசம் கொடுத்தில்லை என்றும், வாதியின் அப்பா கைவசம் தான் இருந்தது என்றால் சரியல்ல. இந்த கிரைய மே வாதியின் அப்பா என் பெயருக்கு பெயரளவில் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்றும், வாதியின் அப்பா வாதியை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் எழுதிக் கொடுத்த கிரையம் ஆவணம் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்திற்கு நான் எவ்விதமான கிரைய மறு பயன் என்னால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் ரூ.4,67,305/-க்கு கிரையம் பெற்றேன். அதில் பணப்பற்று விவரம் கூறவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலே கிரையத் தொகை கொடுத்திருந்தால் பணப்பற்று விவரம் பற்றி குறிப்பிட்டிருப்போம் என்றால் சரியல்ல. நான் 2013- லேயே நான் கியரையம் முடித்தவுடன்

என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துவிட்டேன். என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்று காட்டுவதற்கு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்தேன் என்றால் சரியல்ல.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை 14.3.2025-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.